OS.152/2019
PW1 – முத்துநாச்சி
நாள் 02.07.2025, 04.35 P.M.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் எந்த சர்வே நம்பர் சொத்து குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு எழுதப்படிக்க தெரியாது. சர்வே எண் தெரியாது. நான் தாக்கல் செய்த பிராதில் சர்வே எண். 445/11 ஐப் பொறுத்து மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு சரியாக தெரியாது. வழக்குச்சொத்தை ஆணையர் அளவிடும் போது பழைய ஓட்டு வீடாக இருந்தது தற்சமயம் இடிந்து விட்டது. அய்யாக்கண்ணு மகள்கள் தான் 1,2 பிரதிவாதிகள் என்றால் சரிதான். மூக்குகோனாரின் உடன் பிறந்த சகோதரி தான் சித்தம்மாள் என்றால் சரிதான். சித்தம்மாளின் மகள் தான் பொண்ணுதாயி என்றால் சரிதான்.

2. எனது வீட்டை ஒட்டி கிழக்கு பக்கமான தான் 1 முதல் 3 பிரதிவாதிகளின் வீடு உள்ளது என்றால் சரிதான். எந்த ஆவணத்தின் அடிப்படையில் பிரதிவாதிகள் எங்களுடைய இடத்தில் வீடு கட்டியதாக கூறுகிறேன் என்றால் பட்டா மற்றும் பத்திரம் போன்ற ஆவணங்கள் உள்ளது. எங்களது சொத்துக்குரிய பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது மாமனார் காயாம்பு பெயரில் உள்ளது. எங்களுடைய சொத்திற்கு 53 சதுர மீட்டர் தான் பட்டா உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் மாமனார் பெயருக்கு கொடுக்கப்பட்ட பட்டா சரியான அளவில் உள்ளது என்றால் இல்லை தவறாக உள்ளது. அந்த பட்டாவில் என்ன தவறு என்று எனக்கு தெரியாது.

3. அந்த பட்டாவை ஆட்சேபணை செய்து மேல் நடவடிக்கை எதுவும் நான் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனது மாமனார் பெயரில் உள்ள பட்டா 1993ம் வருடம் வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 1,2 பிரதிவாதிகள் ஏற்கனவே இருந்த அவர்களுடைய பழைய வீட்டை இடித்து புதியதாக வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். கூடுதலாக 4 அடி சேர்த்து எங்களுடைய இடத்தில் கட்டிவிட்டார்கள். 1,2 பிரதிவாதிகள் ஏற்கனவே அவர்கள் வீடு இருந்த இடத்தில் இருந்த அளவில் தான் புதியதாக வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

4. எவ்வளவு விஸ்தீரணம் சொத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தென்வடல் 35 அடி, கிழமேல் 25 அடி என்று கேட்டு தாக்கல் செய்துள்ளேன்.

தாவா சொத்தில் ஒரு போதும் சந்து பாதை இல்லை, வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என்னுடைய இடத்தில் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. புலப்படத்திலும். ஆணையர் அறிக்கையிலும் சந்து இருந்ததாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. ஆணையர் வரைபடத்தில் A,B ன் அளவு 4 அடி எனவும், C,D ன் அளவு 3.4 அடி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கையில் உள்ள அளவானது தாவா சொத்தாக காட்டப்பட்ட அளவுகள், நான் பிராதில் காட்டப்பட்டுள்ள அளவுகளுடன் வேறுபாடுடன் உள்ளது என்றால் சரியல்ல. ஆணையர் வரைபடத்தில் A,D அளவானது என்னுடைய சொத்தையும், 1 முதல் 3 பிரதிவாதிகள் சொத்தையும் பிரித்து காட்டக்கூடிய எப்.எம்.பி (புலப்பட நகல்) ஆக உள்ளது என்றால் சரியல்ல.ஆணையர் வரைபடத்தில் உள்ள A,D லைனிற்கும், எனது வீட்டின் சுவற்றிற்கும் இடையே சந்து போன்ற ஒரு காலியிடம் உள்ளது என்றால் சரியல்ல.

6. ஆணையரிடம் நாங்கள் அடையாளம் காட்டிய வழக்குச்சொத்தானது 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.445/3, 4,5 சொத்துக்கு உள்ளடங்கியதாக இருக்கிறது என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து காவல் துறை அறிவுரையின் பேரில் தாலுகா சர்வேயரை வைத்து இடத்தை அளந்து அதில் 1 முதல் 3 பிரதிவாதிகள் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் காவல்துறை விசாரணையில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய அறிவுறுத்தினார்கள் அதன் பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் பிராதுடன் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடம் தவறாக உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில ஒரு போதும் 4 அடி சந்து இல்லை என்றால் சரியல்ல.

7. நான் தாக்கல் செய்துள்ளள 1 முதல் 3 கிரைய ஆவணங்களும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வாசா.ஆ 1 முதல் 3 ஆவணங்களில் சர்வே எண் மற்றும் பட்டா எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல்ர 3 ஆவணங்களில் தவறாக சந்து பாதை உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள அளவீடுகளானது பிராதுடன் பொருந்தி வரவில்லை கூடுதல் விஸ்தீரணத்துடன் தவறாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8. வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களை எழுதிக்கொடுத்த நபர்களுக்கு அந்த

இடத்தில உள்ள அளவை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் வாதியும், அவருடன் உடன் பிறந்தவர்களும், அவர்களுடைய முன்னோர்களும், எந்த தேதியில் எங்கு வைத்து எவ்வாறு பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம் வாதியும், அவர்களின் உடன் பிறந்தவர்களும், அவர்களின் முன்னோர்களும் பிராதில் சொல்லியபடி பாகம் எதுவும் செய்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

9. ஏற்கனவே இருந்த என்னுடைய வீடு எந்த திசை நோக்கி உள்ளது என்றால் வடக்கு நோக்கி வாசல் முன்பாக கிழமேல் தெரு இருக்கிறது. அதே போல் மேற்கு திசையிலும் தெரு உள்ளது என்றால் சரிதான். எங்களுக்கு கொடுக்கப்பட்ட பட்டாவில் 53 சதுர மீட்டர் விஸ்தீரணம் உள்ள போது அதை விட அதிகமாக இடம் கேட்பது தவறு என்றால் சரியல்ல. பட்டாவின் பின்புறம் உள்ள வரைபடத்தில் சந்து பாதை குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. குறிப்பிடப்பட்டுள்ளது. தவா சொத்தில் எனக்கு எந்த பாத்தியமும் அனுபவமும் இல்லை என்றும், அது சந்துப் பாதை இல்லை என்றாலும் சரியல்ல.

10. தாவா சொத்து 1 முதல் 3 பிரதிவாதிகள் பாத்தியப்பட்டு அவர்கள் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிக்கும் நோக்கில் பொய்யான விவரங்களை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. வழக்கு மூலமும், பரிகாரமும் தவறு என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி